Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

88 August
IIஆம் பிரிவு
(விஞ்ஞானம்)
ஆரம்பம்:
19-4-86(காலை 7.30மணி)
(விடுமுறை நாட்களில் மேலதிக வகுப்புக்கள்)
New Master Institute
B.M.C. Lane, JAFFNA

7.30 - Physics
திரு வர்ணம்
8.30 - Chemistry
திரு. தில்லைநாதன்
9.30 - Zoology
திரு நாகநாதன்
10.30 - Botany
திரு குகாதரன்
9.30 - 11.30-Pure & Appl.Maths
திரு. நல்லையா
விபரங்கட்கு:
New Master Institute
B.M.C. Lane, JAFFNA

ஏடு: 1 யாழ்ப்பாணம் குரோதன ஸு சித்திரை மீ 1 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 ஷஃபா பிறை 4 (14-04 1986) UTHAYAN - A LIVELY TAMIL DAILY இதழ்:126

# இனப்பிரச்சினை தீர்வுக்கு முன்னுரிமை கொடுங்கள்

## வருக புத்தாண்டே!



சித்திரைப் புத்தாண்டைச் சிரித்து வரவேற்கும் இந்தச் சின்னஞ்சிறிசின் எதிர்பார்ப்புகள் என்னவோ?, எத்தனையோ!!

அடிமை வாழ்வில் இருந்து மீளவேண்டுமே என்று ஏங்கித் தவிக்கும் தமிழ் மக்களுக்கும் எத்தனையோ எதிர்பார்ப்புகள்!

அவர்கள் சுதந்திரமும் சமத்துவமும் உள்ள மக்களாக மாறுவதற்கு அக்ஷய வருடமாவது வழி காட்டட்டும். அதனை மிக எளிய முறையில், ஆலய வழிபாட்டுடன் மட்டும் கொண்டாடுவோம்.

வாசகர்கள், விளம்பரதாரர்கள், ஆதரவாளர்கள், அபிமானிகள் அனைவருக்கும் உதயன் — சஞ்சீவி நிர்வாகத்தினர், ஊழியர் சார்பில் புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். மங்களப் புத்தாண்டை மனம் நிறைந்து வரவேற்போம்.

— ஆசிரியர்

## புத்தாண்டுச் செய்தியில் எம். ஜி. ஆர். ராஜீவிடம் உருக்கமான வேண்டுகோள்

சென்னை, ஏப்ரல் 13

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிக்குத் தயவு செய்து முன்னுரிமை கொடுங்கள். இலங்கைத் தமிழ் மக்களை இனப் படுகொலையில் இருந்து காப்பாற்றுங்கள்.

இவ்வாறு தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் பிரதமர் திரு ராஜீவ்காந்திக்கு



உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கிறார்.

புத்தாண்டுச் செய்தி மூலம் பிரதமருக்கு இவ் வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது.

இலங்கை இனப் பிரச்சினைப் பேச்சுக்கள் இறுதிக் கட்டத்துக்கு வந்து உள்ள வேளையில் —

முதலமைச்சரின் புத்தாண்டுச் செய்தி முழுக்க முழுக்க இலங்கைத் தமிழரை மையமாக அமைந்தது முக்கியமானது என்று அவதானிகள் கூறுகின்றனர்.

முதலமைச்சரின் புத்தாண்டுச் செய்தி வருமாறு —

இனப் பிரச்சினையில் அவசியமான நடவடிக்கை எடுப்பதற்கு மத்திய அரசுக்குள்ள கட்டுப்பாடுகள், தடைகள் பற்றி எல்லாம் மாநில அரசுக்கு நன்கு தெரியும்.

ஆனால் துரதிருஷ்ட வசமான நிலையில் உள்ள இலங்கைத் தமிழரைக் காப்பாற்ற வேண்டியது எமது பொறுப்பாகும். அவர்களைக் காப்பாற்றுங்கள் என்று பிரதமரைக் கேட்டுக் கொள்கின்றேன்.



இலங்கை அரசு தமிழரை வாட்டி வதைத்து வதை, தொகை இன்றி கொன்று குவிக்கின்றது.

அயல் நாட்டுச் சம்பந்தம் இலங்கைப் பிரச்சினையில் இருப்பதால், புதுத் திருப்பம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

இனப் பிரச்சினைக்கு கௌரவமான ஒரு தீர்வு காணப்பட வேண்டும். அதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள இலங்கை அகதிகள் திரும்பிச் செல்லும் சூழ்நிலையை மத்திய அரசு உருவாக்க வேண்டும்.

இலங்கை இனப் பிரச்சினை, எளிதில் உணர்ச்சி வசப்படச்செய்யும் ஒன்று. இதனைத் தீய சக்திகள் தங்கள் நலனுக்குப்பயன்படுத்தக்கூடிய அபாயமும் உண்டு.

பஞ்சாப் பிரச்சினை இதனை எமக்கு நன்றாக உணர்த்தி உள்ளது —

இப்படி திரு. எம். ஜி. இராமச்சந்திரன் சொன்னார்.

## ஹமீத், லலித்துடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை

கொழும்பு, ஏப் 14

புதிய யோசனைகள் குறித்து ஜனாதிபதி ஜெயவர்த்தன, வெளிநாட்டமைச்சர் சாஹுல்ஹமீது, தேசியபாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி ஆகியோருடன் பேச்சுக்கள் நடத்தினார்.

கடந்த சனிக்கிழமை இப்பேச்சுக்கள் நடந்தன.

## விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 14

கடந்த வெள்ளிக்கிழமை ஓமந்தை, கேந்தாங்குளம் காட்டுப் பகுதியில் ஆயுதப்படைகள் தேடுதல் நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட செல்லத்தம்பி பாலானந்ததாஸ் (வயது 27) நேற்று நண்பகல் விடுதலை செய்யப்பட்டார்.

இவரை வவுனியா பிரஜைகள் குழு செயலாளர் டாக்டர் பரராஜசிங்கம் வவுனியா மாவட்ட இணைப்பு அதிகாரியுடன் தொடர்பு கொண்டு விடுவிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

## புதுவருடப் புண்ணிய கருமம்

மங்களகரமான சித்திரைப் புத்தாண்டு இன்று அதிகாலை பிறந்தது. அக்ஷய வருடமான அற்புதப் புதுவருடத்தில் சகலரும் சங்கற்ப பூர்வமாக மருத்து நீர் தேய்த்து ஸ்நானம் செய்ய வேண்டும்.

உலகைக் காக்கும் பரம்பொருளை பக்தி விநயத்துடன் பதம் பணிந்து இறை வழிபாடு புரிய வேண்டும் தான தருமம் செய்தல் உத்தமம்.

செந்நிறப்பட்டாடை அல்லது சிவப்புக்கரை வைத்த புதிய ஆடை அணிந்து, நித்திய அனுஷ்டானம் முடித்து இஷ்ட தெய்வ வழிபாடு இயற்றுதல் வேண்டும்.

ஒளி கொடுக்கும் தெய்வமாம் 'உதயனை' சிரம் கூப்பி சிரந் தாழ்த்தி உளமார வணங்குதல் வேண்டும்.

இன்றைய சுபநேரம்: 12 05 முதல் 1 35 வரை (பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.)

இன்றைய ராகு காலம்: 7 35 முதல் 9 05 வரை (பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்)

விஷு புண்ணியகாலம்: ஞாயிற்றுக்கிழமை இரவு 8 20 முதல் திங்கட்கிழமை அதிகாலை 4 20 வரை.

கைவிசேஷம்

இன்று திங்கள் காலை 9 40 முதல் 12 02 மணிக்குள்ளாகவும் புதன் காலை 10 49 முதல் 11 53 க்குள்ளும் யாவரும் கைவிசேஷம் பரிமாறிக் கொள்ளலாம்.

நாள் வேலை ஆரம்பிப்பவர்கள் காலை 9 45 முதல் நண்பகல் 12 00 மணிக்குள் சுப கருமமாற்றலாம்.

## இலங்கை அரசு
## செலவீனங்களை மீண்டும் நிரைப்படுத்த வேண்டிய நிலையில்

கொழும்பு, ஏப்ரல் 14

1986இல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கென 900 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் எது முக்கியமான செலவினம் என்பதை இலங்கை அரசாங்கம் மீண்டும் நிரைப்படுத்தவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

இப்படி சர்வதேச நாணயச் சபை விசாரணைக்குழு ஒன்று தனது அறிக்கையில் கூறியிருக்கிறது.

சர்வதேச நாணயச் சபையில் கடன் பெறும் நாடுகளுக்குச் சென்று விசாரணை நடத்தும் குழு ஒன்றே அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்து விசாரணை நடத்தியது.

திரு. டக்ளஸ் ஸ்கொம் தலைமையில் வந்த இக்குழு இரண்டு வாரங்கள் இலங்கையில் தங்கி நின்றது.

இலங்கை வரவுசெலவுத் திட்டத்தில் பற்றாக்குறை நிலவுவது குறித்து இக்குழு தனது அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளது.

## 100மூடைநெல் பறிபோனது

கிளிநொச்சி, ஏப். 14

கடந்த சனியன்று பிற்பகல் திருவையாறு 2ம் வாய்க்கால் பகுதிக்கு கவச வாகனங்களில் வந்த சிருடையினர் வீடு ஒன்றிலிருந்து சுமார் 100 மூடை நெல்லினை எடுத்துச் சென்றனர் பலர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நெல் மூடைகள் இரண்டு உழவு இயந்திரங்கள் மூலம் முகாமிற்கு எடுத்து வரப்பட்டதாக கூறப்படுகிறது.

## கூட்டுத்தளபதி கருத்து: ராஜீய வட்டாரங்கள் அதிருப்தி

கொழும்பு, ஏப்ரல் 14

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண புதிய யோசனைகள் சமர்ப்பிக்கப்படவுள்ள தருணத்தில் போராளிகளுக்கு எதிரான தாக்குதலைத் தீவிரமாக்கப் போவதாக கூட்டுத் தளபதி அறிவித்து இருப்பது, கொழும்பு ராஜதந்திர வட்டாரங்களில் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தி உள்ளது.

ஆயுதபடைகளின் கூட்டுத் தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்க கொழும்பில் உள்ள ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், போராளிகளுக்கு எதிரான தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்படும் என்று அறிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் சொன்னதாவது:-

போராளிகளை மறைவிடங்களில் இருந்து வெளியேற்றும் தாக்குதல்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பாதுகாப்புப் படையினர் பெரும்பாலும் நாளாந்தம் தாக்கப்படுகின்றனர்.

கடந்த மூன்று வாரங்களில் 21 பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டனர். 38 பேர் வரையில் காயங்களுக்கு ஆளாகினர்.

இந்த நிலையில் படையினர் தாக்குதலை தீவிரப்படுத்துவதைத் தவிர

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புதுவருட விற்பனை அமர்க்களம்

நல்லூர், ஏப்ரல் 14

யாழ்ப்பாணத்தில் புதுவருடவிற்பனைகள் நேற்று அமர்க்களமாக நடைபெற்றன.

இன்றைய புதுவருடதினத்தையொட்டி மக்கள் தமக்குத் தேவையான பொருள்களை வாங்குவதில் மிக மும்முரமாக ஈடுபட்டனர்.

## வாசகர் கவனத்துக்கு

இன்று இந்துப் புதுவருடம் அதையொட்டி உதயன் - சஞ்சீவி பணியாளர்களுக்கு விடுமுறை.

அதனால் நாளை செவ்வாய்க்கிழமை மட்டும் உதயன் நாளிதழ் வெளிவரமாட்டாது

புதன் கிழமையன்று உதயன் வழமைபோல பிரசுரமாகும்.

மாகாண சபைகளுக்கு

## சரியான அதிகாரங்கள் இருப்பின் தமிழ்த் தலைவர்களை ஏற்க வற்புறுத்துவேன் -- பதியுதீன்

கொழும்பு, ஏப்ரல் 14

சரியான அதிகாரங்களுடனான மாகாணசபையை அரசு முன்வைத்தால், அதை ஏற்கச் சொல்லி தமிழ்த் தலைவர்களை நான் வற்புறுத்துவேன்.

முன்னாள் கல்வி அமைச்சர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் மேற்கண்டவாறு சொன்னார்.

முஸ்லிம் பிரமுகர்களின் கூட்டம் ஒன்று நேற்று ஹோட்டல் ரன்முதுவில் இடம்பெற்றது.

டாக்டர் மஹ்மூத் தலைமை வகித்துப் பேசுகையில் சொன்னதாவது;

வெளிவிவகார அமைச்சர் சாஹுல் ஹமீது புதிய யோசனைகளுடன் டில்லி செல்லப்போவதாகச் செய்தி.

மாகாண சபை தான் புதிய யோசனை என்று கூறப்படுகிறது.

மாகாணசபை யோசனை நல்லது தான். ஆனால் சரியான அதிகாரங்கள் அச் சபைகளுக்கு வழங்கப்படவேண்டும்.

அப்படி வழங்கப்படுமானால் அதனை ஏற்கும்படி நான் தமிழ்த் தலைவர்களை வற்புறுத்துவேன்.

இலங்கையைச் சுற்றி கடல்கண்ணி வெடி வைக்கப்போவதாக போராளிகள் அறிவித்துள்ளார்கள். இது நாட்டுக்கு ஆபத்தை ஏற்படுத்தும். இனியும் இனப் பிரச்சினையை நீடிக்கவிடக் கூடாது. உடனடித் தீர்வு காணப்படவேண்டிய காலம் வந்துவிட்டது.

இப்படி டாக்டர் மஹ்மூத் சொன்னார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு

## இலங்கை அரசின் முயற்சியில்தான் தங்கியுள்ளது -- அமிர்

திருச்சி, ஏப்ரல் 13

இனப்பிரச்சினைக்குஉடனடித் தீர்வு காண்பது என்பது இலங்கை அரசு எடுக்கும்முயற்சியில்தான் தங்கியுள்ளது.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் திரு அ. அமிர்தலிங்கம் சொன்னார்.

திருச்சியில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்,

திரு. அமிர்தலிங்கம் அமைச்சர் தொண்டமானை திருச்சியில் வைத்துச் சந்தித்தார்.

மதுரையில் நடைபெறும் உலகத்தமிழ்சங்கத்தின் அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொள்வதற்காக புத்தாண்டு அன்று திரு அமிர்தலிங்கம் மதுரை செல்கின்றார்.

அச்சமயம் திரு. பி. நெடுமாறனை திரு அமிர்தலிங்கம் சந்தித்துப் பேசுவார்.

முச்சந்தி முனி



தமிழன் மனம் விரும்பிப் புதுவருஷம் கொண்டாடுறதுக்கும் ஒருகாலம் வராமலே போகும்.. .. !
வரும்.! வரும் !!
நிச்சயம் வரும் !!!

## இலங்கை அரசின்புதிய யோசனைகள் எப்படி இருக்கும்?

கொழும்பு,ஏப்ரல் 14

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்றத்தின் சட்டவாக்க அதிகாரம் ஆகியவற்றைப் பாதிக்காத முறையில் இலங்கை அரசு தயாரித்து வரும் புதிய யோசனைகள் அமைந்திருப்பதாக கொழும்பு அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

புதிய யோசனையும் வடக்கு-கிழக்கு இணைப்பை நிராகரிக்கின்றது.

இந்தியாவில் உள்ள மாநில அரசு முறையையும் நிராகரிக்கின்றது

1985இல் டில்லியில் வைத்து இலங்கை அரசு கைவெழுத்திட்ட தகவல் திட்ட யோசனை, மாகாண சபைத் திட்டம், இந்தியாவில் உள்ள யூனியன் பிரதேச அமைப்பு ஆகிய வைகளில் இருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட அம்சங்களின் தொகுப்பே இலங்கை அரசு, டில்லிக்குத் தெரிவித்துள்ள புதிய யோசனைகள் என்று கூறப்படுகின்றது.

மாகாணசபை - முறையான அதிகாரப் பரவலாக்கல் இருந்தாலும் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்துக்கா, நாடாளுமன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை தோல்வி

ஷார்ஜா, ஏப்ரல் 13

ஆசிய ஐக்கிய கிண்ண சாம்பியன்களான இலங்கைஉலகக்கோப்பை சாம்பியன்களான இந்தியாவிடம் தோல்வியடைந்தது

இன்று (ஞாயிற்றுக்கிழமை)ஷார்ஜாவில்நடைபெற்ற ஒஸ்ட்ரோ—ஏஷியா கிண்ணத்திற்கான அரையிறுதி ஆட்டத்திலேயே இந்தியா வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஒதுக்கப்பட்ட 50 ஓவர்களில் 205 ஓட்டங்களைப் பெற்றது.

இந்திய அணி 49 1 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 206 ஓட்டங்களைப் பெற்று மூன்று விக்கட்டுகளினால் ஆட்டத்தில் வெற்றி பெற்றது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீச்சல் தடாகத்தில் கண்ட ஜெயலலிதா

### ஸ்ரீதரின் அந்தநாள் ஞாபகம்

தமிழ்த் திரையுலகின் மூத்த டைரக்டர்களில் ஒருவர் ஸ்ரீதர். படவுலகில் பல வெற்றி — தோல்விகளைச் சந்தித்தவர் அவர்.

டைரக்டர் ஸ்ரீதர் அந்த நாள் ஞாபகத்தை அசை போடுகிறார் இங்கே!

படப்பிடிப்பு இல்லாத நாட்களில் நடிக நண்பர் நம்பியாரின் வீட்டுக்குச் சென்று உடற்பயிற்சி செய்வது என் வழக்கம்.

பழகுவதற்கு அருமையான மனிதர் அவர். கட்டுடலை எப்படிக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்கு அவரே சாட்சி.

ஒரு நாள் வை எம். சி ஏ நீச்சல் தடாகத்திற்குப் போனேன். நீச்சல் பழகும் பயிற்சிக்காகத்தான்!

நீச்சல் தாடாகத்தில் ஜெயலலிதாவையும், அவருடைய தாயார் சந்தியாவையும் பார்த்தேன்.

மாணவிப் பருவம் தாண்டாத இளம் அழகியான ஜெயலலிதாவின் தோற்றப்பொலிவும் சுறுசுறுப்பும் என்னைக் கவர்ந்தன.

வெண்ணிற ஆடையின் கதாநாயகிக்கு பொருத்தமான நடிகை என்று முடிவு செய்தேன்.

சந்தியா அம்மையாரும் நல்ல நடிகை ஆதலால் எனது எண்ணம் ஈடேறும் என்ற நம்பிக்கை மட்டும் துளிர் விட்டது.

நடிக நண்பர் வி. கோபால கிருஷ்ணன் ஜெயலலிதாவின் குடும்ப நண்பர். அவரிடம் என் எண்ணத்தைச் சொன்னேன்.

அவருடைய தூண்டுதலின் பேரில், ஜெயலலிதா கதாநாயகியாக நடிக்க, சந்தியாவின் இசைவு கிடைத்தது.

ஜெயலலிதாவின் கான்வென்ட் ஆங்கில உச்சரிப்பும் இனிய தமிழ் உச்சரிப்பும் அந்தப் பாத்திரத்திற்காகவே படைக்கப் பட்டவர் போன்ற எண்ணத்தை ஏற்படுத்தியது. ஒரே உற்சாகத்துடன் ஒப்பந்தம் செய்து விட்டேன் என்றார்.—

தினசரி சினிமா

# யாழ் ஆயுள்வேத கல்லூரியை அங்கீகரிக்குக

## ஜனாதிபதிக்கு மகஜர்

பருத்தித்துறை, ஏப். 14

யாழ். ஆயுள் வேதக் கல்லூரியை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும். இக்கல்லூரிக்கான பரீட்சைகளை ஆயுள்வேதத் திணைக்களம் நடத்தி மாணவர்களைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வட - இலங்கை சுதேச வைத்தியர் சங்கம் ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தனவை மேற்கண்டவாறு கேட்டுள்ளது.

இதுசம்பந்தமாக வட-இலங்கை சுதேச வைத்தியர் சங்க உப - தலைவர் டாக்டர் எஸ் எஸ். வேலும்மயிலும் ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தனவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

1985 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பகுதியில் உள்ள ஒரேஒரு தமிழ் ஆயுள் வேதக் கல்லூரி யாழ். ஆயுள் வேதக் கல்லூரியாகும்.

பரீட்சைகள் யாவும் 1982 ஆம் ஆண்டு வரை ஆயுள் வேதத் திணைக்களத்தாலேயே நடத்தப்பட்டு மாணவர்களின் பட்டம் அங்கீகரிக்கப்பட்டு மாணவர்கள் பதிவு செய்யப்பட்டு வந்தனர்.

ஆனால் இந் நடைமுறை 1983 ஆம் ஆண்டு தொடக்கம் நிறுத்தப்பட்டது. இதனால் இக்கல்லூரியில் கல்வி கற்ற சுமார் 150க்கும் மேற்பட்ட மாணவர்கள் பெரும் பாதிப்புக்கு ஆளானர்.

எனவே 1 83 ஆம் ஆண்டு தொடக்கம் இக்கல்லூரியில் பயின்று பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பட்டத்தை அங்கீகரிக்க வேண்டும்.

அவர்களைப் பதிவு செய்து இக்கல்லூரியையும் அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும்.

டிப்ளோமா ஆயுள்வேத வைத்தியம் பெற்றவர்களான இம் மாணவர்களின் பெறுபேறுகள் சகல அரசாங்க, கூட்டுத்தாபன, தனியார் நிறுவனங்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகஜரின் பிரதிகள் சுதேச வைத்திய அமைச்சர் திரு ஜே. எம். லொக்கு பண்டார, கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு எஸ். தொண்டமான், பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டன

## மீண்டும் முதல்வராக தெரிவானார்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 14

ஸ்ரீமீனாட்சி சனசமூக நிலையத்தின் முதல்வராக மீண்டும் திரு. செல்லையா விஜயரத்தினம் போட்டியின்றித் தெரிவானார்.

இச் சனசமூக நிலையத்தின் தலைவராகவும் (பின்னர் சட்ட விதி திருத்தத்தின்படி) முதல்வராகவும் ஒன்பது ஆண்டுகளுக்குமேல் பதவியேற்றுள்ளார்.

## காங்கேசன்துறையில் வர்த்தக நிலையம் வீடு கொள்ளை

காங்கேசன்துறை, ஏப். 14

முகமூடி அணிந்த ஆயுதம் தாங்கிய இனந்தெரியாத கோஷ்டி ஒன்று காங்கேசன்துறையில் உள்ள பிரபல வர்த்தக நிலையத்திலும், அதன் உரிமையாளர் வீட்டிலும் கொள்ளை அடித்தது.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:-

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பு ஹோட்டல் நடத்தி வந்த காங்கேசன்துறையைச் சேர்ந்த ரி. ஏ அப்புத்துரை என்பவர் 77ஆம், 83ஆம் கலவரங்களில் பாதிக்கப்பட்டு தன் உடைமைகளையும், தன் மகனையும் இழந்து இங்கு வந்து காங்கேசன்துறையில் வியாபார நிலையம் ஒன்றை ஆரம்பித்து நடத்தி வந்தார்.

இவரின் வீட்டினுள் புகுந்த ஆயுதம் தாங்கிய இனந்தெரியாதவர்கள் வீட்டில் உள்ளவர்களைப் பயமுறுத்தி அங்கிருந்து சங்கிலி, மோதிரம், தோடு போன்றவற்றைக் கொள்ளையிட்டனர்.

இவற்றின் பெறுமதி சுமார் 50 ஆயிரம் என்றும் வீட்டுக்காரர் தெரிவித்தார்.

பின்பு இவரின் மகனை கூட்டிச் சென்று இவரது கடைக்குச் சென்று அங்கிருந்த போட்டோகொப்பி மெசின், சைக்கிள், உடுபுடைவைகள் உட்பட 7 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளையிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது

## புலோலிப் பகுதி அபிவிருத்திக்கு

### ரூ. 1 லட்சத்து 60 ஆயிரம்

பருத்தித்துறை ஏப். 14

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை புலோலி உப — அலுவலகப் பகுதியில் உள்ள வரத்துப்பளை ஆனைவிழுந்தான் மயானத்தை புனரமைக்கவும் கற்கோவளம் பொது சனச்சந்தையைப் புனரமைக்கவும், புலோலி ஊரெல்லை வீதி மீசி ஒல்லை வீதிகளை புனரமைக்கவும், யாழ் மாவட்ட அபிவிருத்தி நிதியிலிருந்து 1 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவை யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபைச் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு வி எம். பஞ்சலிங்கம் ஒதுக்கி உள்ளார்,

இவற்றுக்கான நிதியை ஒதுக்குபடி யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை செயலாளர் திரு வி எம். பஞ்சலிங்கம், யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு அன்ரன் அல்பிரட் ஆகியோரை புலோலியிலுள்ள முன்னேற்றாமோதய சபைத் தலைவர் திரு ஏ. என் எஸ். திருச்செல்வம் கோரியிருந்தார்.

வராத்தப்பளை ஆனைவிழுந்தான் மயானப் புனரமைப்புக்கு ஏற்கனவே 25ஆயிரம் ரூபா நிதிஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது

அந்நிதி பற்றுக்குறையாக இருப்பதாகச் சுட்டிக் காட்டியதை அடுத்து மயானப்புனரமைப்புக்கு யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபைச் செயலாளர் மேலும் 25 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியதோடு கற்கோவளம் பொதுச் சந்தைப் புனரமைப்புக்கு ரூபா 50 ஆயிரத்தையும் ஒதுக்கியுள்ளார்

மேலும் புலோலி ஊரெல்லை வீதிக்கு ரூபா 40 ஆயிரத்தையும் புலோலி மீசிஒல்லை வீதிக்கு ரூபா 20 ஆயிரத்தையும் விசேஷமாக ஒதுக்கீடு செய்துள்ளார்.

## சமய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஏப் 14

புத்தாண்டை முன்னிட்டு வெங்கடேஸ்வரப் பெருமாள் கோவிலில் 14.4.86 பகல்12 மணிக்கு கூட்டு ஆர்ச்சனை நடைபெறவுள்ளது.

*

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் அதிகாலை 12மணி தொடக்கம் இரவு 7மணி வரை பூசைகள் ஒழுங்கு செய்யப்பட்டு உள்ளன.

★

கொக்குவில் மேற்கு வீரமா பிடாரி அம்மன் கோயிலில் மாலை 5 மணிக்கு திருவிளக்கு பூசை நடைபெறும்.

*

வண்ணை சாந்தையர் மடம் கற்பக விநாயகர் கோயிலில் வருடப்பிறப்பு உற்சவ நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

*

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயில் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகிறது. 23, 24 ஆம் திகதிகளில் தேர், தீர்த்த உற்சவங்கள் நடைபெறவுள்ளன.

*

மாவிட்டபுரம் மருதடி விநாயகர் ஆலய வருடாந்தேர்த்திருவிழா இன்று நடைபெறும்.

செவ்வாய்க்கிழமை நாளை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

உற்சவ பிரதம குரு நவாலியூர் வெங்கட சுப்பிரமணியக் குருக்கள் ஆகும்.

*

சண்டிலிப்பாய் நாகபூஷணி அம்மன் கோயில் மகோற்சவம் இம்மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகிறது

24 ஆம் திகதி அன்று தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது.

*

கல்வயல் பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகும்.

தேர் தீர்த்தத் திருவிழாக்கள் 23, 24 ஆம் திகதிகளில் நடைபெறும்.

மக்கள் முகம் 

### கரணவாய் வடக்கு விவசாயிகள் சங்கம்

பருத்தித்துறை, ஏப்.14

கரணவாய் வடக்கு விவசாயிகள் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு. என் கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

தலைவர்:- திரு ந.தம்பிஐயா துணைத் தலைவர்:- திரு. எம் நடராஜா, செயலாளர்:- திரு. ந கந்தசாமி, துணைச்செயலாளர்:- திரு தி அருணாசலம், பொருளாளர்:- திரு. க. இராசரத்தினம்.

செயற்குழு உறுப்பினர்கள்:- திரு. ச. விமலநாதன், திரு. கே. ஆறுமுகநாதன், திரு எஸ். ஆறுமுகநாதன், திரு. இ. பரமகுரு, திரு. ஆ. கிருஷ்ணபிள்ளை, திரு.ம. புலேந்திரன், திரு. அ. சின்னத்தம்பி.

### பொருளாதார கலாசார வளர்ச்சிக் கழகம்

யாழ்ப்பாணம், ஏப் 14

இளவாலை பொருளாதார கலாசார வளர்ச்சிக் கழகத்தின் புதிய வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

செயலாளர்: அ யோ. ரவீந்திரன், உபசெயலாளர்: ஞானரூபா, பொருளாளர்: எம். ஏ உதயருஜ், உபபொருளாளர்: எஸ் ஜூலியன்,பத்திராதிபர்: கெனட்றி, உபபத்திராதிபர்: பவியன், கலைத்துறை: ஏ. ஜெயக்குமார் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்: எப். டபிள்யு. விமலேந்திரன், உபபொறுப்பாளர்கள்: ஏ சந்திரன், எஸ். சி. இரகரி, நிர்வாகக்குழு உறுப்பினர்: ஜி. பிரேம்குமார்.

## விமானநிலைய காணிசுவீகரிப்பு

## 300 மீற்றருக்கு மேல் சுவீகரிப்பு இல்லை

மட்டக்களப்பு, ஏப் 14

மட்டக்களப்பு விமான நிலைய சுற்றுடல் காணி சுவீகரிப்பு 500 மீற்றரில் இருந்து 300 மீற்றராகக் குறைக்கப்படும்.

எக்காரணம் கொண்டும் 300மீற்றருக்கு மேல் சுவீகரிக்கப்படமாட்டாது.

பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு.செ.இராசதுரை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விமானநிலையசுற்றுடல் காணி சுவீகரிப்பால் பாதிக்கப்பட்டோர் சங்க செயலாளர்திரு ஜோர்ஜ் பிள்ளை அவரை அமைச்சில் சந்தித்த சமயம் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. ஜோர்ஜ்பிள்ளை இக்காணி சுவீகரிப்பு காரணமாக வெளியேறிய குடும்பங்கள் தொடர்பாக அமைச்சரிடம் விளக்கிக் கூறுகையில்:-

விமான நிலைய பாதுகாப்புக்கு 300 மீற்றர் போதுமானது. 500 மீற்றர் சுவீகரிப்பு தேவை இல்லை தற்போது 300 மீற்றருக்குள் அடங்கும் பாடசாலை, ஆலயம் ஆகியன அவ்விடத்தில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்றார்.

அமைச்சர் இராசதுரை இதற்குப் பதிலளிக்கையில் ஏற்கனவே பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டதை அடுத்து அமைச்சு 300 மீற்றர் மட்டும் சுவீகரிக்க இணங்கியுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடுவிரைவில் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

குடியமர்த்தப்பட்ட பகுதியின் அத்தியாவசிய தேவைகளுக்கு பன்முக வரவு செலவுத் திட்டத்தில் 65 ஆயிரம் ரூபா ஒதுக்கப்படும் என்றார்.

## அதிபர் முயற்சியால் கொத்தணி அமைப்பு சிறந்து விளங்கும்

கிளிநொச்சி, ஏப்ரல் 14

அரசின் கொள்கைக்கு இணங்க பளை, பூநகரி, அக்கராயன் பாடசாலைகள் கொத்தணி அமைப்பின் கீழ்க்கொண்டு வரப்பட்டன. இதனால் பளை, பூநகரி, பரந்தன் கல்வி வட்டாரத்திலிருந்து இவை பிரிந்து சென்றுள்ளன. இவற்றிற்குத் திறமை வாய்ந்த அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் முயற்சியால் இக்கொத்தணி அமைப்பு சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.

பரந்தன் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் பரந்தன் அதிபர்கள் சங்கத்தால் கொத்தணி அதிபர்களுக்கான பாராட்டு வைபவம் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களின் கல்விப் பணிப்பாளர் ஜனாப். எம். எம், மன்சூர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பரந்தன் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. நா. திருநாவுக்கரசு... திருநீதனாசலம்பிள்ளை தலைமையில் வைபவம் நடைபெற்றது.

வைபவத்தில் கிளிநொச்சி வட்டாரக் கல்வி அதிகாரி ஜனாப் எஸ் ஏ. சி. இஹுறா, முருகமோட்டை மகாவித்தியாலய அதிபர் திரு. எஸ் துரைராசா, தருமபுரம் மகா வித்தியாலய அதிபர் திரு. ரி. அந்தோனிப் பிள்ளை, பரந்தன் இந்து வித்தியாலய அதிபர் திரு, ம. பத்மநாதன் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்.

## அரசியல்வாதியின் ஒப்பமிட்டு பிணைப்பணம் பெற முயன்றாராம்

மட்டக்களப்பு, ஏப். 14

இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள தமிழ் அரசியல்வாதி ஒருவரின் ஒப்பமிட்டு அவரது பிணைப் பணத்தைப் பெற முயன்றார் என்று கூறப்படும் நபரொருவரை மட்டக்களப்பு நீதிமன்றப் பொலீஸார் கைது செய்தனர்.

இச்சம்பவம் அண்மையில் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் முனைக்காடு வாசியான கதிர்காமப் போடி. சிவலிங்கம்

சம்பவம் தொடர்பாக கூறப்படுவதாவது;

முன்னாள் மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர் வே. தம்பிராசா தற்போது இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ளார்.

இவர் இலங்கையில் இருந்த சமயம் இரு வழக்குகளுக்கு பிணைப்பணமாக 500 ரூபா செலுத்தி இருந்தார்.

இவ்வழக்குகள் முடிந்ததை அடுத்து மேற்படி நபர் தம்பிராசாவின் ஒப்பமிட்டு பிணைப்பணம் பெற விண்ணப்பித்தாராம்.

உடனே நீதிமன்ற ஊழியர் பொலீஸிற்குத் தகவல் கொடுக்கவே நீதிமன்றப் பொலீஸ் உத்தியோகத்தர் திரு. எஸ். ரவீந்திரராஜா சந்தேக நபரைக் கைது செய்து விசாரணை மேற்கொண்டார்.

விசாரணையின் பின்பு சந்தேக நபர் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிபதி ஜனாப். காசிம்பப்பர் 250 ரூபா அபராதமும் 5 வருட ஒத்திவைப்பு 6 மாதச் சிறைத் தண்டனையும் விதித்தார்.

## மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

# மூதூர் தமிழ் அகதிகளை மீண்டும் பழைய இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை

திருகோணமலை, ஏப் 14

வாகரையில் தஞ்சம் புகுந்துள்ள மூதூர் தமிழ் அகதிகளை மீண்டும் பழைய இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப் போவதாக திருகோணமலை அரசாங்க அதிபர் திரு.டி எம். ஆரியரத்தின தெரிவித்தார்.

உதயன் செய்தியாளர் அவரைப் பேட்டி கண்டபோது மேற்கண்ட தகவல் வெளியானது.

உணவுப் பற்றுக் குறையினால் கஷ்டப்படும் திரியாய் மக்களுக்கு உணவு விநியோகத்தைத் துரிதப்படுத்தவும் நடவடிக்கை எடுப்பதாகவும் அரச அதிபர் உறுதியளித்தார்.

இதுசம்பந்தமாக கிறிபுர உதவிஅரசாங்கஅதிபருக்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

### தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மாணவர் சாதனை

யாழ்ப்பாணம், ஏப்.14

ஜீ. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் நால்வர் ஏழு பாடங்களில் அதிவிசேட சித்தியும் எட்டாவது பாடத்தில் திறமைச்சித்தியும் பெற்றனர்.

அவர்கள் விவரம் வருமாறு:-

இராஜேந்திரன்பகீரதன், ஞானமூர்த்தி மயூரதன், சாந்தராசா சசிதேவன், செல்வி. சஜந்தி தவராஜா.

## அம்பாறை மக்கள் எதிர் நோக்கும் வெள்ள ஆபத்து

அம்பாறை, ஏப்ரல் 14

சேனநாயக்கா சமுத்திரம் கட்டப்பட்ட பின்னரும் கூட அம்பாறை மாவட்ட மக்கள் வருடாந்தம் வெள்ளப் பாதிப்பை எதிர்நோக்கியே வருகின்றனர். எனவே உள்நாட்டு, அல்லது வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனைகளைப்பெற்று இந்த மாவட்டத்தில் வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

அம்பாறை மாவட்ட அபிவிருத்தி சபையின் மாதாந்தக் கூட்டத்தில் அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. இ. விநாயகமூர்த்தி மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அபிவிருத்திச் சபைத் தலைவர் சட்டத்தரணி ஜனாப்.எம்.எச். ஜெனபர் தலைமையில், அம்பாறை கச்சேரியில் கூட்டம் நடைபெற்றது.

அபிவிருத்திசபை உறுப்பினர் திரு விநாயகமூர்த்தி தொடர்ந்து உரையாற்றுகையில், "அம்பாறை மாவட்டத்தில் சேனநாயக்கா சமுத்திரம் கட்டப்பட்டு 35 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் இந்த மாவட்டத்தில் வருடாந்தம் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதைத் தடுக்கமுடியாத நிலை நீடித்து வருகின்றது.

இதற்கான காரணங்கள் ... ளத் தேக்கத்தைத் நிரப்பதற்கான நிரந்தர வடிகாலமைப்புக்களோ இங்கு மேற்கொள்ளப்பட்டதாக இல்லை.

வருடாந்தம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு அகதிகளாகவோருக்கு வழங்கப்படும் நிவாரணங்களுக்கு சமூக சேவைகள் அமைச்சு செலவிடும் தொகையைக் கொண்டே, நிரந்தர வெள்ளத் தடுப்பு நடவடிக்கைக்கு ஆவன செய்யலாம்.

எனவே தொடர்ந்தும் இந்த அவலம் நீடிக்காதவாறு சம்பந்தப்பட்டோர் ஆவன செய்ய வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

### புலோலியில் போஷாக்கு பயிற்சி நெறி

பருத்தித்துறை,ஏப்.14

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அதன் மகளிர் குழுவினது ஆதரவுடன் வளர்ந்தோருக்கான போஷாக்குப் பயிற்சி நெறி ஒன்றை நடத்த உள்ளது.

வளர்ந்தோர் போஷாக்குப் பயிற்சி நெறிக்கான சகல நடவடிக்கைகளையும் யாழ் திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் திரு எஸ். இருபைநிலைனின் பணிப்பின் பேரில் புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் திரு. சோ. அருணகிரி பருத்தித்துறை கரவெட்டி உதவி அரசாங்க அதிபர்களின் உதவியுடன் மேற்கொண்டுள்ளார்.

### கந்தபுராண படன விழா

யாழ்ப்பாணம், ஏப் 14

கந்தபுராண படன விழா நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் 14. 15, 16 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபைத் தலைவர் திரு மு ஞானப்பிரகாசம் தலைமை வகிப்பார்.

ஆதீன புராண சபையினர், இவ்விழாவை ஒழுங்கு செய்துள்ளனர்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீ ல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மூன்று தினங்களும் ஆசியுரை நிகழ்த்துவார்

## அன்னையர் முன்னணி வேறுஅமைப்புகளுடன் கூட்டுச் சேரவில்லை

நல்லூர், ஏப்ரல் 14

அன்னையர் முன்னணியின் செயற்குழு வேறு எந்தவொரு அமைப்புடனும் கூட்டுச் சேரவில்லை என அறிவித்துள்ளது

இது சம்பந்தமாக அன்னையர் முன்னணி விடுத்துள்ள அறிக்கை விவரம் வருமாறு:

அன்னையர் முன்னணி தனது கொள்கைகளுக்கு ஏற்ப வேறு எந்தவொரு அமைப்புடனும் சேராது தனித்து இயங்கு வது என செயற்குழு தீர்மானித்தது.

எனினும் இத் தீர்மானத்திற்கு மாறாக எந்தவொரு அங்கத்தவரும் செயற்பட்டு வந்தால் அது தனிப்பட்ட முறையிலான செயற்பாடாகும்.

இது அன்னையர் முன்னணியைப் பிரதிநிதித்துவப் படுத்தாது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இடமாற்றம்

பருத்தித்துறை, ஏப். 14

பருத்தித்துறைத் தொகுதி அம்பன் கமநல சேவை நிலைய விவசாயப் போதனாசிரியர் திருமதி தனபாலசுந்தரசாமி பாடவிதான உத்தியோகத்தராகப் பதவி உயர்வு பெற்று யாழ். திருநெல்வேலி விவசாயத் திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

புலோலி விவசாயப் போதனாசிரியராகக் கடமையாற்றிய திரு. என். கிருஷ்ணபிள்ளை அம்பன் கமநல சேவை நிலைய விவசாய போதனாசிரியராகப் பொறுப்பேற்றார். சாவகச்சேரி விவசாயப் போதனாசிரியராகக் கடமையாற்றிய திருமதி கே. தனபாலசிங்கம் புலோலிபகுதி விவசாயப் போதனாசிரியராக இடமாற்றம் செய்யப்பட்டார்.

## எழுவைதீவு பிரஜைகள்குழு

யாழ்ப்பாணம், ஏப். 14

எழுவைதீவில் பிரஜைகள் குழு ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

அருள்திரு. சா. பி. கிருபானந்தன் அடிகளார் தலைமையில் அங்குரார்ப்பணக் கூட்டம் நடந்தது.

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்: அருள்திரு. கிருபானந்தன் அடிகளார். தலைவர்: திரு. ப. யே. தேவராசா, செயலாளர் திரு க. கோபாலபிள்ளை பொருளாளர். திரு கு. இருதயநாதர் ஆறுபேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

காலத்தின் பெறுமதியை அறிந்து கொள். காலமே உன் உயிர். காலத்தை வீணாக்குவது, உன்னையே நீ கொலை செய்வது போலாகும்.

-அறிஞர் ஜேம்ஸ் அலன்.

உதயன்
உண்மை - அச்சமை - தடந்திறமை
இல. 15, கேத ஒழுங்கை தொலைபேசி: 24805
பிக்கோர் தீணா வீதி 22073
யாழ்ப்பாணம். 14 04-86 த. பெ. 28

## அக்ஷய வருடத்தில் அகலட்டும் தடைகள்

இன்று தமிழ்ப் புத்தாண்டு. இந்துக்களின் சித்திரைப் புதுவருடம்.

இன்று தொடக்கம் வருடம் முழுவதிலும் மங்களம் மலர வேண்டும் என்று மனம் விரும்பும் நாள்.

வாழ்க்கையில் வளமும், வசதியும் விளைய வேண்டும் என இதயம் இறைஞ்சும் நாள்.

இந்த வருடத்தில் புதுவழி காண்போம், நல்வழி சமைப்போம் என இலட்சியம் வகுக்கும் நன்னாள்

கொண்டாடிக் குதூகலித்து, கொள்ளை இன்பம் காணவும் சிலர் இந்தத் திருநாளைத் தெரிவு செய்து விடுகிறார்கள்.

பழையன சலித்துப்போக, புதுமை காண வேண்டும் என்று மனித மனம் விழைவது இயல்பு.

அதன் விளைவாய் எழுந்தவையே புது வருடங்கள், கொண்டாட்டங்கள் எல்லாம்.

கழிந்துபோன ஆண்டு கஷ்டமானதாக இருந்திருப்பினும், வறுமை நிறைந்ததாக இருப்பினும் அவற்றை மறந்து, பிறக்கும் புதுவருடமாவது நல்லதாக, சிறப்பானதாக இருக்கட்டும் என மனிதர்கள் நினைக்கிறார்கள்.

அதே எதிர்பார்ப்பு ஈழத்தில் நலிவுறும் தமிழ் மக்களுக்கு மட்டும் பொருந்தாமலா போகும்?

அரசியல் சுதந்திரம் இன்றி, அடிமைகளிலும் கேவலமாய், வாழ்வா சாவா என்று கணத்துக்குக் கணம் காலத்தை ஓட்டுகிறார்கள் அவர்கள்.

எனினும் பிறக்கும் புதுவருடத்திலாவது இன்னல்கள் நீங்கி, இனப்பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைத்து பீதி இன்றி, சுதந்திரப் புருஷர்களாக வாழ்வதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காதா என்று ஒவ்வொரு தமிழன் இதயமும் இன்று ஏங்காமல் இருக்க முடியாது.

''அல்லற்பட்டு, ஆற்றாது அழுதகண்
ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.''

இவ்வாறு பொய்யாமொழியார்சொன்னதை எமது நிலைக்கு ஏற்றவாறு எடுத்துக்கொள்ளலாம்.

தமிழ் மக்கள் தினம் தினம் உயிருக்கு அஞ்சி விடும் கண்ணீர், கொடுங்கோல் அரசின் செல்வமாகத் திகழும் ஆயுதப்படையை அழிக்கும் எதிரணிப்படையாக மாறக் கூடாதா என நினைத்தால் அதில் தப்பு என்ன?

அரக்கத்தனமும், அநீதியும் என்றுமே வென்றதில்லை; நிலைத்ததும் இல்லை. இதனைப் புத்த மதமும் தெளிந்த நீர் போலப் போதிக்கிறது.

அந்தப் புத்த மதத்தை அனுஷ்டிப்போரும் இன்று புதுவருடம் கொண்டாடுகிறார்கள். இந்த வருடத்திலாவது அட்டூழியத்தையும் ஆக்கிரமிப்பையும் நிறுத்தி சமாதானத்தையும் சமத்துவத்தையும் நிலைநிறுத்த வேண்டும் என்று அவர்கள் திடசங்கற்பம் கொள்வார்களா?

அதே போல—

தமிழ் மக்கள் மத்தியில் உள்ள ஒற்றுமையின்மை, ஒழுக்கமின்மை, கட்டுப்பாடில்லாமை, காட்டிக்கொடுக்கும் தன்மை, பணிவின்மை, பண்பின்மை ஆகிய யாவும் நீங்கி, அரசியல் சுதந்திரம் என்ற இலக்கை அடைவதற்கு நாம் திடசங்கற்பம் பூணுவது அவசியம்.

அஷய வருடப் பிறப்பான இன்று அந்தத் தடைகளைக் களைவதற்கு வாக்குப் பிரமாணம் செய்வோமாக. அதன் மூலமே விடிவிற்கு வழி பிறக்கும் எனவும் நம்புவோமாக

# உலக மக்கள் போற்றும் உதய தெய்வம் சூரியன்

## ஆதவன் வழிபாடு ஆதியானது; புதுவருட கதாநாயகன் அவனே

செல்வி.இந்திராதேவி சிற்றம்பலம்பி.ஏ.(சிறப்பு)

மேட சக்ராந்தி எனக் கூறப்படும் இரவும் பகலும் சமனான இச் சித்திரை மாதத்தில் முதல் நாளான இன்று இராசிகளுள் முதலாவதாகிய மேடராசியில் ரோகினி நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தில் 12 மணி 30 நிமிடம் அளவில் அக்ஷயவருடம் பிறக்கின்றது

''அக்ஷய'' என்பது அழிவில்லாதது எனப் பொருள்படும். அழிவில்லாத வருடம் பிறக்க இருக்கின்றது என்பது மகிழ்ச்சிக்குரியது.

புதுவருட நினைவு, புது வருடத்தினைப் பிறப்பிக்கும் சூரியனை - சூரிய தெய்வத்தைப்பற்றி அறியத் தூண்டும்.

சூரியன் உலகத்து யாவர்க்கும் கண்கண்ட தெய்வம். எகிப்தியர் தங்களை சூரிய குலத்தவர்களாகக் கருதியதோடு தினமும் சூரிய கிரணங்கள் தங்கள் மேனியிற் படும் வண்ணம் இரு கைகளையும் தெற்றிக்கு நேரே ஏந்திவாறு சூரியனை வழிபடுபவர்.

பபிலோனியாவில் சால்டியர் என்னும் இனத்தவர் சூரியனை முதன்மையாக வைத்து வழிபட்டனர். கிரேக்கர் சூரியனை ''அப்பலோதி தெய்வம்'' என வணங்கினர். அமெரிக்கர் ஈரானியர், யப்பானியர் ஆகியோரும் சூரிய வழிபாட்டினராகக் காணப்படுகின்றனர்.

உலகம் முழுதும் பரந்து நிற்கும் சூரியன் உலகத்தவரால் வணங்கப்பட்டு வருவதைக் காணலாம்

### வேதகாலத்தில் சூரியன்

இயற்கையை வழிபட்ட வேதகால இந்துக்கள் சூரியனை ஒளிவடிவாகக் கண்டு ஒளியை வழிபட்டுப் பின் அவ்வொளிக்கு சூரியன் எனப் பெயரிட்டனர்

இருக்கு வேதத்தில் பத்து சூக்தங்கள் சூரியனைப் பற்றிக் கூறுகின்றன சூரியன் எல்லாவற்றையும் பார்க்கிறான் உலகம் முழுவதையும் மறைந்து நின்று கவனிக்கின்றான் இவன் மக்களின் நல்லனவும் தீயனவுமான இருவகைச் செயல்களையும் கூர்ந்து நோக்குவான்.

பொழுது புலர்தல் இவன் தோற்றத்துக்கு காரணமாய் நிற்கின்றது. இருளை நீக்குவான் நாட்களைப் பிரித்து அமைந்து மக்களின் வாழ்க்கையை நீடிக்கச் செய்வான் என வேதப் பாடல்கள் குறித்து நிற்கின்றன.

யசுர், சாம, அதர்வண வேதங்களிலும் சூரியன் தெய்வமாகப் போற்றப்படுவதைக் காணலாம்.

இதிகாசங்களும் சூரியனைப் போற்றுகின்றன. மகாபாரதத்தில் வரும் கர்ணன் சூரியக் கடவுளின் புத்திரன்.

மகாபாரத இராமாயண அரச குலத்தை சூரிய வம்சம் எனவே அழைப்பர்.

தமிழ் நாட்டின் சங்க கால இலக்கியங்களில் சூரிய வழிபாடு பற்றி குறிப்புக்கள் காணப்படவில்லை. ஆனால் பின் எழுந்த திருக்குறள்சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்களில் சூரியன் பற்றிய குறிப்பு காணப்படுகின்றன. திருக்குறளில் சூரியனைப் போற்றிப் பாடப்படாவிடினும் வான்சிறப்பு என்னும் பகுதி சூரியனின் தொழிலாகிய மழைக்கு முக்கியத்துவம் கொடுப்பதைக் காண முடிகின்றது.

ஆனால் சிலப்பதிகாரத்தின் மங்கள வாழ்த்துப் பாடலிலேயே 'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி கண்ணகி அந்நாட்டு மன்னனால் தன் கணவன் கோவலன் கள்வன் எனக் குற்றம் சுமத்தப்பட்டதைக் கேள்விப்பட்டதும் சூரியனைப் பார்த்து 'நீ யறிது என் கணவன் கள்வனோ?' என நீதி கேட்கின்றாள்.

இங்கு நீதியின் நாயகனாக சூரியன் படைக்கப்படுகின்றான்.

### ஆலய வழிபாட்டில் சூரியன்

ஆலயங்களில் சூரியன் தெய்வமாக வைக்கப்பட்டு வணங்கப்பட்டு வருகின்றான் சூரியனுக்கு என கொனசாவில் ஒரு பெரிய கோயில் உண்டு. வேறும் பல இடங்களில் கோயில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன

சிவனும் விஷ்ணுவும் ஒருவராக எழுந்தருளி எல்லாப்பிராணிகளுக்கும் காட்சி கொடுக்கும் திருவுருவம் சூரிய மூர்த்தி என்பது பெரியோர் வாக்கு உலகைக்காக்கும் இறைவன் அடியார்களுக்கு ஒவ்வோர் உருவில் காட்சி கொடுத்தருளுவான் ஆனால் அவர்கள் எல்லோருக்கும் தரிசனம் அருள்வது சூரியன் உருவத்திலே என்பர்.

ஆதவன் அருவம் உருவம் என்னும் இரு வடிவங்களில் உளன் அருவம் ஒன்றாகவும் உருவங்கள் பன்னிரண்டாகவும் கூறுவர். பன்னிரு உருவங்களைப் பன்னிரண்டு ஆதித்தர்களாக வழங்குவர். அவர்கள் பன்னிரண்டு மாதங்களுக்கும் உரியவர்கள்.

சூரியன் நவக்கிரகங்களல் மத்தியிலும் வைக்கப்பட்டு வணங்கப்பட்டு வருகின்றான். இங்கு தனது தனித்துவ சக்தியினால் நவக்கிரகங்களுள் மேலானவனாக வணங்கப்படுகின்றான். நவக்கிரகங்களுடன் மட்டுமன்றி தனி இருப்பிடத்தினையும் பூஜையினையும் ஆகம முறைப்படி அமைந்த ஆலயங்களில் சூரியன் பெறுகின்றான்.

சிவாலயங்களில் இவனுக்கு தனிஇடம் உண்டு. ஆலயங்களில் சூரியன் உதிக்கும் நேரம், உச்சிக்கு வரும் நேரம், மறையும் நேரம், ஆகிய மூன்று நேரங்களிலும் பூஜை நடைபெறும்

காயத்திரி மந்திரம் சூரியனையே போற்றி நிற்கின்றது உலகுக்கெல்லாம் கண் போன்றவரும் உலகின் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியவற்றுக்கு காரணமானவரும் வேதவடிவினரும், முக்குணத்தால் மூன்று வடிவம் கொண்டவரும் பிரம்மா, சிவன், விஷ்ணு ரூபமாயுள்ளவருமான சூரிய பகவானுக்கு வணக்கம்' என இம்மந்திர நூல் மேலும் குறித்து நிற்கின்றது.

### உதயன் பற்றி விஞ்ஞானிகள்

சூரிய ஒளியில் உள்ள சக்தியையே இன்றைய விஞ்ஞானிகள் 'ஈதர்' என்பர். இச்சக்தியே உலகை இயக்குகின்றது எனலாம்.

இச்சக்திமை அடையப் பெற்றுக் அறிவின் ஒளி உண்டாகும் என்று மெய்ஞானிகள் கண்டார்கள். இதனை ஞான திருஷ்டி என்னும் பார்வை அவர்களுக்குச் சித்திக்கப்பெற்றது புறக்கண்ணுற் காணமுடியாதவை பலவற்றை அகக்கண்ணுற் கண்டு திருஷ்டார்களாயினர்கள்.

சூரியனின் ஒளியின்றி துரிதமாக செயற்பட முடியாது எனவே விஞ்ஞானிகள் மெய்ஞானிகள் இருவரும் அறியாமை அகற்றும் 'ஒளி வடிவத்திலேயே' சூரியனைக் காண்கின்றனர் ★

# அஞ்சா நெஞ்சராக விளங்கிய அருள் வேந்தர் அப்பர் அடிகள்

## ஆடல் வல்லானுக்கு மட்டும் அடிமையான பாடல் வல்ல பைந்தமிழ் ஞானி

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும் கந்தபுராணபடன நிறைவு நிகழ்ச்சியுடன் அப்பர் சுவாமிகள் திருவுருவப் பவனியும் தொடர்ந்து நிகழ்வதை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

திருத்தொண்டின் செல்வராக விளங்கிய அப்பரடிகளின் நினைவாக நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள் இக்கட்டுரையை எழுதி அருளியுள்ளார்கள்.

சிவனுடையபாதத்தை இதயத்தில் பதித்த சிவபாதவிருதையரின் தவப் பயனாய் வந்தவதரித்த சம்பந்தப்பெருமான் புத்திரமார்க்கம் நின்று பதினாறு வயதில் முத்திப் பேறுபெற்றவர். வறுமையும், பிணியும் நம்மை அணுகாமை வேண்டி நாமுய்ய நாடுய்யப் பண்ணிறைந்த பாடல்களை எமக்குத் தந்தருளினார்.

சமயகுரவர்கள் நால்வரும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற பக்தி மார்க்கங்களுக்குத் தனி ஒருவராக அமைந்தமை ஓர் அதிசயம்.

அப்பர் பெருமான் தாசமார்க்கம் நின்று எண்பத்தோராவது வயதில் சிவபதம் எய்தியவர். வயதிலும் அருளாளர் என்ற வகையில் மேல் நிற்பினும் தம்மைத் தாழ் நிலையிருத்திச் சீர்காழிச் செல்வர் ஊர்ந்து வந்த பல்லக்கைத் தமது தோளில் சுமந்து வந்ததை எண்ணிப்பார்க்க வேண்டும்.

'அப்பர் எங்குற்றார்' என்று தோணிபுரத் தோன்றல்வினவ, பல்லக்கைச் சுமந்த வண்ணம் 'அடியேன் இங்குற்றேன்' என்றார் வாகீசர். சீர்காழிப்பிள்ளைக்கு வாகீசர் அளித்த பெருமை இதனாற் பெறப்படும்

சம்பந்த சுவாமிகள் அருளிய பாடல்கள் நமக்கு வேண்டியவற்றை வேண்டிய நேரம் தரக்கூடியவல்லமை படைத்தனவாய் இருக்கின்றன. மனிதனைப் பிடித்து வாட்டும் தீராதநோய் நீங்கத் திருநீற்றுப் பதிகமும், இரககோளாறுகள் நீங்கக் கோளறு திருப்பதிகமும், செய்வினை நீங்க ''அவ்வினைக்கு இவ்வினை'' என்ற திருப்பதிகமும் பகைமழிக்க, 'செய்யனே திருஆலவாய் மேவிய ஐயனே' என்ற திருப்பதிகமும் இன்னேரன்ன வேறுபல திருப்பதிகங்களுமருளி எம்மை ஈடேற்ற வந்தவர் பிள்ளைப் பெருமான்.

இன்று ஆன்மாக்களுக்கு இன்றியமையாது தேவைப்படுவது 'அஞ்சா நெஞ்சு'. அது அப்பர் பெருமானிடம் நிறைய இருந்தது. 'அல்லல் என் செயும் அருவினை என் செயும், தொல்லை வல்வினை தொந்தம் தான் என்செயும்'' ''வானந் துளங்கிலென் மண் கம்பமாகிலென் தானந் துளங்கித் தலைதடுமாறிலென்'' 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்று எக்காளமிட்ட தீரர் வேறு யாருமிலர்.

ஆடவலான் அரசனுக்கு மட்டும் அவர் அடிமை. ஆனல் அரசனும் அவருக்குத் துரும்பு. அவருக்கு அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்ச வருவது ஒன்றுமில்லை. அவர் பகை நடுவில் வாழ்ந்தவர். அவரின் பாசுரங்கள் சுண்ணாம்புக் காளவாயை சுகந்தப் பொய்கையாகவும், நஞ்சு கலந்த சோற்றை அமுதமாகவும், கொலை ஏவிவிட்ட யானை அவரை வலம் வந்து பணியவும் வைத்தன. அவர் கையில் தாங்கிய உழவாரத் திருப்படையும், நாவிலும் நெஞ்சிலும் தாங்கிய பஞ்சாட்சரப் பெரும் படையுமே சமணப் பெரும் பகையை வென்றன. பொன்னையும் மண்ணையும் ஒன்றாகக் கண்ட கருமயோகி, அஞ்சா நெஞ்சம் படைத்த அதிதீரர்.

நாளும் நால்வரும் தமிழோடிசைபாடிப் பரமனைப் பக்தி வலையிற் சிக்க வைத்தவர்கள்.

தனயன் தன்னையாற்

(4 ஆம் பக்கம் பார்க்க)



**பொய்யாமொழி**

குறள்:
ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து.

பொருள்:
ஒரு பிறப்பில், ஆமைபோல் ஐம்பொறிகளையும் அடக்கியாள வல்லவனானால், அஃது அவனுக்குப் பல பிறப்பிலும் காப்பாகும் சிறப்பு உடையது.

## கிளிநொச்சி புதிய சந்தையிலும் தரகர் தொல்லை, மோசடி

கிளிநொச்சி, ஏப் 14

கிளிநொச்சி புதிய சந்தையிலும் தரகர்களினதும் ஏமாற்று பேர் வழிகளினதும் தொல்லைகள் இருந்து வருகின்றன. நிறுவை மோசடிகளும் நிலவுகின்றன.

விலைக்கட்டுப்பாட்டதிகாரிகளின் வரவு கிடையாது. இதனால் இங்குள்ள சில வர்த்தகர்கள் தமது விருப்பப்படி நிறுக்கிறார்கள். கிலோவுக்கு பதில் இருத்தல் படிகளை உபயோகிக்கிறார்கள் நிறை குறைந்த படிகளும் பாவிக்கப்படுகின்றன.

தற்போதைய புதிய சந்தைக்கருகில் பாதுகாப்புப்படை அலுவலகம் உள்ளதால் பலரும் இங்கு வர அஞ்சுகின்றனர். வயோதிபர்களும் இளம் சிறார்களுமே பெரும்பாலும் சந்தையில் காணப்படுகின்றனர்.

இது ஏமாற்றுக்காரர்களுக்கு வாய்ப்பாக இருக்கிறதாம்.

## இன்று ரதோற்சவம்

நல்லூர். ஏப்ரல், 14

அத்தியடி நடராஜ வீரசக்தி விநாயகர் ஆலய ரதோற்சவம் இன்று காலை நடைபெறுகின்றது.

9 மணியளவில் வசந்த மண்டப பூஜையாகி, 10.30 மணியளவில் தேர் இழுக்கப்படும்.

நாளை 15ஆம் திகதி காலை 10 மணி அளவில் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

பிரம்ம ஸ்ரீ கி. நாராயணக் குருக்கள் மேற்படி மஹோற்சவ விழாக்களை நடத்தி வைப்பார்.

# மருதமர நிழலிலே எழுந்தருளி மனக்கவலை மாற்றும் விநாயகர்

## இரதோற்சவம் இன்று

செல்வி. கௌரிகணேஷநாதன்

மானிப்பாய் என்றதும் எம் மனக்கண் முன் தோன்றுவது மருதடி ஆலயமே ஆகும். இவ்வாலயம் மிகவும் புராதனமானது இவ்வாலயத்தின் பிரதான வீதியை நோக்கியிருக்கும் ஆலயவாசலில் மிகப் பழைமையானமருதமரம் ஒன்று காணப்படுகின்றது. மரத்தின் அடிப்பகுதியில் சிறப்பாக இயற்கையாக அமைந்திருக்கும் பொந்திற்குள் விநாயகரின் திருவுருவச் சிலை அமைந்துள்ளது.

ஆலயத்தின் மூலஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் பிள்ளையார் திருவுருவம், வடக்கில் நாட்டுக்கோட்டை [illegible] ஊர் செட்டியார் [illegible] மூலமாய் வரவழைக்கப்பட்டு இற்றைக்கு ஏறக்குறைய இருநூறு வருடங்களுக்கு முன் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது என்று கூறப்படுகிறது.

இவ்வாலயத்தின் சுற்றுப் பிரகாரத்தில் சிவலிங்கம், சக்தி, வள்ளி தெய்வானை சகிதம் பால சுப்ரமயண்ர், நடேசர், நவக்கிரகங்கள், சண்டேஸ்வரர் போன்ற மூர்த்திகள் எழுந்தருளியுள்ளன.

இவ்வாலயத்திற்கு தாமரைக்குளம், மணிக்கூட்டுக் கோபுரம், [illegible] மஞ்சனக் கிணறு, தீர்த்தக் கிணறு, இராஜகோபுரம், தீர்த்தமண்டபம் ஆகியவை அமையப்பெற்றிருக்கின்றன.

இங்கு நித்திய பொங்கல் பொங்குவது போல இலங்கையில் வேறெந்தக் கோயிலுமில்லை எனலாம்.

இப்பொங்கல் வணக்கங்களைப் பற்றி அனேக புலவர்கள் புகழ்ந்து கவிகள் பாடியிருப்பதாக ஆலய வரலாறு கூறுகிறது.

இவ்வாலயத்தில் மாதந்தோறும் சதுர்த்தி விழாவும், 21 நாட்கள் பிள்ளையார் பெருங்கதையும், திருவெம்பாவையும், சிவராத்திரியும், நவராத்திரியும், கந்த சஷ்டியும் வெகு விமரிசையாக [illegible] நடைபெறுகின்றன. பங்குனி மாதத்தில் மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சித்திரை வருடப்பிறப்பு அன்று இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

பல அடியார்கள் இரதோற்சவத்தில் பங்குபற்றி வினைகளை வேரோடறுக்கும் விநாயகப் பெருமானின் அனுக்கிரகத்தைப் பெறுவார்கள்

மருதடி இரதத்தை வியந்து பேசாதவர் இல்லை;

தலப் பெருமை வாய்ந்த மருதடி விநாயகரின் இரதோற்சவம் இன்று.

இத்தினத்தில் அவன் தான் வணங்கி அனுக்கிரகம் பெற்று ஆன்ம ஈடேற்றம் அடைவோமாக.

## சிந்தனை சிறக்க வைப்பாய்!

சித்திரை என்னும் பெண்ணே
சிந்தனை சிறக்க வைத்து
இத்தரை தன்னில் நன்றாய்
எழுச்சியை எமக்கு ஊட்டி
நித்திரை கொள்வார் தமக்கும்
நிஜமதைக் காட்டி உத்தல்
முத்திரை பதித்து இன்ப
முடிவினை மலர வைப்பாய்!

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

## சித்திரை வருவதால் சிந்தனையில் மகிழ்ச்சி!

சித்திரையும் வருகுது சிந்தையும் மகிழுது
இத்தரையில் புதுயுகம் பூத்துக் குலுங்குது
புத்துணர்வு பிறக்குது புதுவருடம் பூக்குது
சத்தியமா சோதனை வெற்றிபெற வருகுது.

நாடுவளம் பெருகுது நல்விளைச்சல் விளையுது
காடுவளம் அழிந்து கனிவளம் பெருகுது
இன்னல்பல அழியுது இனப்பிரச்சினை தீருது
இதயத்தில் இன்பபூத்துக் குலுங்க வருகுது
அடிமைநிலை மாறுது அன்புநிலை ஓங்குது
கொடுமைஎங்கும் குறையுது குதூகலம் பிறக்குது
பிடிமைவாய்வு விலகுது பித்தலாட்டம் குறையுது
புதுஉலாம் கண்டிட புதுவருடம் பிறக்குது.

காரை. நா. குகநேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ், இந்தி, ஆங்கிலம்
ஒரிஜினல் வீடியோ பிரதிகளை
உடனுக்குடன் பெற்றுக்கொள்ள
*
**வீடியோ விஷன்**
213, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T'Phone: 22477

**உதயன்**

14. 04 1986 திங்கட்கிழமை

பிறந்த நாள்—திருமண வைபவங்கள்
பூப்புனித நீராட்டு விழா—புதுமனை புகு விழா
போன்ற மங்கல வைபவங்களைத்
தத்ரூபமாக ஒளிப்பதிவு செய்துகொள்ள
*
**வீடியோ விஷன்**
213, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T'Phone: 22477

# ஜனாதிபதி றேகன் உதவி கோருகிறார்

## நேசநாடுகளுக்கு தூதுவர் வால்டர்ஸ் பயணம்

வாஷிங்டன், ஏப். 13

லிபியாவுக்கு எதிரான தனது போராட்டத்துக்கு மேலைத்தேய நேசநாடுகளின் உதவியை ஜனாதிபதி றேகன் கோரியுள்ளார்.

இதற்காக தமது ஐ.நா. தூதுவர் வால்டர்ஸ் என்பவரை அந்நாடுகளுக்கு றேகன் அனுப்பி வைத்துள்ளார்.

தூதுவர் வால்டர்ஸ் தனது பயணத்தின் முதற்கட்ட பணியாக பிரிட்டிஷ் பிரதமர் மாக்கிரட் தட்சரைச் சந்தித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பிய நாடுகள் ஹேக் நகரில் கூடி அமெரிக்க வேண்டுகோள் பற்றி விவாதிக்க இருப்பதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக லிபியாவுக்கு எதிராக பொருளாதார வர்த்தக தடைகளை நடைமுறைப்படுத்துமாறு இந்த நாடுகளை றேகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

லிபியக் கடற்படை இலக்குகளில் தாக்குதல்களை அமெரிக்கா மேற்கொண்டால் அது நிலைமையை மிகச் சிக்கலாக்கும் எனவும் சில மேற்கு நாடுகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளதாகவும் மேலும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் லிபிய ஜனாதிபதி கேர்ணல் கடாபி; அமெரிக்கா லிபியாவைத் தாக்கும் பட்சத்தில் எதிர்பாராத அளவுக்கு வாங்கிக் கட்ட வேண்டி வரும் என எச்சரித்துள்ளார்.

அமெரிக்காவின் ஏகாதிபத்திய அத்துமீறல்கள் சோவியத் ரஷ்யாவையும் இன்னும் நட்பு நாடுகளையும் இந்த மோதல்களுக்குள் இழுத்து விடும் எனவும் கடாபி மேலும் எச்சரித்துள்ளார்

இதனிடையே சோவியத் செய்தி ஏஜன்சியான பிராவ்தா அமெரிக்கப் போக்கை கடுமையாகக் கண்டித்துள்ளது.

அமெரிக்காவின் அணு ஆயுதப் பரிசோதனைகளுக்கு எதிரான உலகக் குற்றச்சாட்டை லிபிய விவகாரத்தை உரத்துப் பேசுவதன் மூலம் அது திசை திருப்பி விடப் பார்க்கிறது.

இவ்வாறு பிராவ்தாவின் கண்டனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லிஸ்பன் நகரில் குண்டு வெடிப்பு

## இடதுசாரி கெரிலா குழு உரிமை கோருகிறது

லிஸ்பன், ஏப்ரல் 13

லிஸ்பனிலுள்ள எயர் பிரான்ஸ் நிறுவன குண்டு வெடிப்பிற்கு நாங்களே பொறுப்பாளிகள்.

இவ்வாறு பிரான்ஸ் இடதுசாரி கெரில்லாக் கன்குழுவொன்று உரிமை கோரியுள்ளது.

போர்த்துக்கலின் அடுத்த நகரான ஒபோட்டோவிலுள்ள 'அனேய்' செய்தி நிறுவனத்துக்கு இந்தத் தகவல் தொலைபேசியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவுடன் பிரான்ஸ் ஒத்துழைப்பதற்கு எதிராகவே இந்தக் குண்டு வெடிப்பை மேற்கொண்டதாக அந்தத் தொலைபேசியில் காரணம் கூறப்பட்டதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்தக் குண்டு வெடிப்பில் யாரும் காயம் அடையவில்லை எனவும் கட்டடத்துக்கு மட்டும் சேதம் ஏற்பட்டதாக பொலீஸ் தெரிவித்துள்ளது.

இந்தகட்டடத்திலேயே அவுஸ்திரேலிய தூதரகமும் அமைந்திருந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கர்நாடக மாநிலத்துக்கு மேலும் வரட்சி நிவாரணம்

## கூடுதலாக 50கோடி ரூபா வழங்க பிரதமர் ராஜீவ் முடிவு

புதுடில்லி,ஏப்ரல் 13

கர்நாடக மாநிலத்துக்கு மேலும் 50 கோடி ரூபாவை உதவி நிதியாக மத்திய அரசு வழங்கும்.

இவ்வாறு பெங்களூரில் நடந்த பொதுக்கூட்டமொன்றில் பேசும் போது பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அறிவித்தார்.

கர்நாடக மாநில முதலமைச்சர் ராஜினமா மற்றும் அங்கு நடந்த சில விவகாரங்கள் எல்லாம் ஒரு பெரிய நாடகம் தான்

சாராய ஊழல் விவகாரத்தில் அரசு நியாயமாகவே நடந்துள்ளது

அரசைக் குற்றம் சாட்டுவதற்கு ஆதாரங்கள் இருக்க முடியாது.

இன்னும் தூய்மையை நிரூபிக்க கர்நாடக அரசுக்கு வாய்ப்புகள் உண்டு என்றும் குறிப்பிட்டார்.

ஹரியாணாவின் தேசிய மாணவர் மாநாட்டில் கலந்து கொண்டு பிரதமர் ராஜீவ் உரையாற்றினார்.

நாட்டின் நலவிருத்திக்கு ஏற்றதான புதிய கல்விக் கொள்கைகள் நடைமுறைப் படுத்தப் படும்.

வேலைவாய்ப்பைக் கருத்திற்கொண்ட கல்வி வாய்ப்புக்கள் மேலும் உருவாக்கப்படும்.

படித்து விட்டு வேலை இல்லாதிருக்கும் நிலையை இல்லாதொழிப்பதற்குத் தெரிவு செய்யப்பட்ட திறமையான மாணவர்களுக்கே உயர் கல்வி வாய்ப்புகள் வழங்கப் படும்.

கல்வித் திட்டத்தில் மேலும் தேசிய ஒருமைப்பாடு சமாதானம், தேச பக்தி ஆகிய உயர்ந்த உணர்வுகளையும் மாணவர்கள் பெறக்கூடிய வாய்ப்புகள் திட்டத்தில் உட்படுத்தப்படும்.

இவ்வாறு விளக்கினார் பிரதமர் ராஜீவ்.

### வெளி உலகில்

### இரா. செழியன் தெரிவானார்

சென்னை, ஏப்ரல் 13

ஜனதா சென்னை மாநிலக்கட்சியின் தலைவராக திரு இரா. செழியன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திருச்சியில் நடைபெற்ற இதற்கான தெரிவில் இரா.செழியன் 135 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

இவரோடு போட்டியிட்ட திரு ஜான் விஜயராகவனுக்கு 105 வாக்குகள் கிடைத்தன

### பங்களாதேஷ் டாக்டர்கள் அதிருப்தி

டாக்கா, ஏப். 13

பங்களாதேஷின் அரசினால் நடத்தப்படும் 8 மருத்துவக்கல்லூரிகளின் டாக்டர்கள் தமது அதிருப்தியை அரசுக்குத் தெரிவித்துள்ளனர்.

அரசாங்க சேவையாக தமது பணியையும் அரசு அங்கீகரிக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பங்களாதேஷ் வைத்தியசாலைகளில் 10 ஆயிரம் மருத்துவத்தாதிமார் 24 மணி நேர வேலை நிறுத்தமொன்றில் குதித்துள்ளனர்

சம்பள உயர்வு, விசேட படி என்பன தமக்கு வழங்கப்பட வேண்டுமென அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர்

### ஹரித்துவார் கும்பமேளா

புதுடில்லி,ஏப்ரல் 13

ஜம்மு காஷ்மீர் பகுதி ஹரித்துவாரில் நடக்கும் கும்பமேளாவில் பல இலட்சக்கணக்கான யாத்திரிகர்கள் பங்கு கொள்கிறார்கள்.

நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் யாத்திரிகர்கள் செல்வதற்கான பிரயாண ஏற்பாடுகளை அரசு சிறப்பாகக் கவனித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் புனித கங்கை ஆற்றில் 40 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் தீர்த்தம் ஆடுவார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது

### கைலாய யாத்திரை விண்ணப்ப அறிவிப்பு

(புதுடில்லி. ஏப். 13)

திருக்கைலாய, மானசரோருவ யாத்திரை மேற்கொள்ள விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

புதுடில்லியிலுள்ள சுற்றுலாத்துறையில் டணிமனைக்கு வைத்திய அத்தாட்சிப் பத்திரத்துடன் விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

17 ஆயிரம் அடி உயர மலைப்பிரதேசத்தில் யாத்திரிகர் நடந்து செல்லக்கூடிய உடல்நலம்கொண்டவர் என்பதை சான்றுப் பத்திரம் உறுதிசெய்ய வேண்டும்.

31 நாள் கொண்ட இந்த யாத்திரைக்கு உணவு, தங்குமிட வசதிகள் உட்பட இந்தியச் செலாவணியில் 8440 ரூபா செலவாகுமென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை
கூட்டுறவு நலவிருத்திச் சங்க
**அறிவித்தல்**

யாழ் வைத்தியசாலை கூட்டுறவு நலவிருத்திச் சங்கத்தில் அங்கத்தவர்களாய் இருந்து மேற்படி வைத்தியசாலையில் தற்பொழுது கடமையில் இல்லாத அங்கத்தவர்கள் அனைவரும் எதிர்வரும் 30-4-86 திகதிக்கு முன்பாகத் தங்கள் பங்கை மாற்றிக்கொள்ள வேண்டும்.

தவறும் இடத்து பங்குப் பணம் அடகுப் பணத்துடன் சேர்ப்பதுடன் அங்கத்தவர் கோவையிலிருந்து தங்களின் பெயர்கள் நீக்கப்படும்.

அதன் பின்னர் கொடுப்பனவோ அன்றேல் பங்கு மாற்றமோ செய்யமுடியாது என்பதைத் தாழ்மையுடன் அறியத்தருகின்றோம்.

க. கிருஷ்ணராஜா, தலைவர். யோ. இம்மனுவேல், காரியதரிசி.

**இதோ ஓர் நற்செய்தி!**

பாவனையாளர்களின் நலன்கருதி மீண்டும்
**றெபின் சோப்களின்**
**விலைகள் குறைக்கப்பட்டுள்ளன**
என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன்
அறியத்தருகிறோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| றெபின் பார் சோப் | பழைய விலை | 13-75 | புதிய விலை | 12-50 |
| றெபின் வெள்ளை சோப் | ,, | 2-25 | ,, | 2-00 |
| றெபின் நீல சோப் | ,, | 2-75 | ,, | 2-00 |
| றெபின் பேபி வெள்ளை 50 துண்டுகள் பைக்கற் | | 42-50 | | 40-00 |
| றெபின் பேபி நீலம் 50 துண்டுகள் பைக்கற் | | 45-00 | | 42-50 |

**வியாபாரிகளுக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும்.**

கவனிப்பு: விலைக் குறைப்பின் நிமித்தம் வியாபாரிகளுக்கு ஏற்பட்டுள்ள தாக்கத்தினை நிவர்த்தி செய்யும்பொருட்டு எங்களின் விற்பனை முகவர்கள் உங்களுடன் தொடர்புகொள்வார்கள் என்பதையும் அறியத்தருகிறோம்.

நன்றி

**பெனின்சுலா சவர்க்காரத் தொழிலகம்**
9, கண்டி வீதி, நாவற்குழி.

நாவலர் பாடசாலையில்

# நாவலர் சைவத் தமிழ் பண்பாட்டு நிலையம் அமைக்கப்பட வேண்டும்

## தர்மகர்த்தா சபை கூட்டத்தில்கல்விப்பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஏப் 14

நாவலர் பாடசாலையில் நாவலர் சைவ தமிழ் பண்பாட்டு நிலையம் அமைக்கப்படல் வேண்டும்.

நாவலர் தர்மகர்த்தா சபைக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் இக்கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

'நாவலர்' சொத்துக்கள் மூலம் நாவலர் பெருமானின் நோக்கங்களை நிறைவு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியவர் பண்டிதமணி.

இவ்வாறு கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் குறிப்பிட்டார்.

நாவலர் சைவத் தமிழ்ப் பண்பாடு நிலையம் பழமை வாய்ந்த ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தை மறுசீரமைத்து வளர்ச்சியுற உதவும் என்று தலைமையுரையில் திரு. சுந்தரலிங்கம் குறிப்பிட்டார்.

வித்துவான் க. திருநாவுக்கரசு, யாழ் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. இ சிவானந்தன் பாடசாலை அதிபர் திரு. ப. சிவஞானசுப்பிரமணியம் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபைச் செயலாளர் திரு. ஆ பஞ்சாட்சரம் ஆகியோரும் உரையாற்றினர்கள்.

# போலிகள் பற்றி

## சங்கிலியன் புனர்வாழ்வு கழகம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஏப் 14

சங்கிலியன் புனர்வாழ்வுக் கழக உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வோர் கழக அடையாள கார்ட்டுடன் வருவார்கள். ஆதலால் போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்.

சங்கிலியன் புனர்வாழ்வுக் கழகம் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் இவ்வாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

சங்கிலியன் புனர்வாழ்வுக் கழக அகதிகள் முகாமிற்கும் பொதுமக்களுக்கும் உள்ள நல்லுறவைக் கெடுப்பதற்குச் சில தீய சக்திகள் முற்படுகின்றன.

ஒருசிலர் எங்கள் மக்களை ஏமாற்றும் வகையில் தாமும் அகதிகள் என்று கூறிக்கொண்டு யாழ் பஸ்நிலையத்திலும் ஏனைய இடங்களிலும் எமது உற்பத்திப் பொருள்கள் போன்ற பொருள்களை விற்பனை செய்கின்றார்கள். இதைப் பொதுமக்கள் கவனத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

உண்மையான அகதிகளுக்கு உதவி செய்யவும் இவ்வாறு அத்துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது

# அஞ்சா நெஞ்ச....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தாளம் போட்டுப் பாடுவதைக் கண்ணுற்றுள மயர்ந்த உலகபிதா பொற்றாளம் ஈந்தருளினார்.

பிள்ளையார் ஈழமணித் திருநாட்டுக்கு எழுந்தருள விருப்பில்லாதிருந்த போழ்தும் திருக்கேதீஸ்வரப் பெருமானை - 'செத்தார் எலும்பணிவான் திருக்கேதீச்சரத்தான்' எனப் போற்றிப் பண்ணிசைத்தார். நாட்டுமக்கள் பசிப்பிணியால் அல்லலுற்ற போது பிள்ளையாரும், அப்பரும் இறைவனை இறைஞ்சிப் படிக்காசு பெற்று பாமரர்களைப் பாதுகாத்தனர்.

திருமறைக்காடு சிவதலத்தில் வேதங்களாகிய திருமறையினால் அடைக்கப்பட்டிருந்த திருக்கதவை அப்பர் பெருமான் திறக்கப்பாடியதும் அதை சம்பந்தசுவாமிகள் அடைக்கப்பாடியதும் [illegible]

நால்வர் [illegible] இசைப்பிரியன், தேப்பிரியன் என்பது தேற்றம்' நால்வர் தமிழ் நம்பெருநிதி, மண்ணில் நல்ல வண்ணம் வாழவும் எண்ணில் நல்ல கதிக்குக் குறைவராமலிருக்கவும் அவர்கள் எமக்கு வழி காட்டினர்.

சைவப்பெரியார் திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபைத் தலைவர் திரு மு. ஞானப்பிரகாசம் அவர்களின் முயற்சியால் அப்பர் பெருமானுக்கு திருவுருவச் சிலை அமைத்து, நகுலேஸ்வரத்தில் இருந்து எழுந்தருளச் செய்து வீதியுலா விழாக்கண்டு திருக்கேதீஸ்வரத்தில் பிரதிஷ்டை செய்யவிருப்பது ஓர் பெரும் கைங்கரியம்.

இதற்கு ஆக்கமும், ஊக்கமுமளித்துத் துணை நின்ற அன்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த ஆசிகளை வழங்குகிறோம்.

'மேன்மை கொள் சைவ [illegible] எல்லாம்'

[illegible] சாந்தி, சாந்தி!

### கமலாம்பிகை வித்தியாலய மாடிக்கட்டிடம்

புங்குடுதீவு, ஏப். 14

புங்குடுதீவு மடத்துவெளி கமலாம்பிகை வித்தியாலயத்தில் நிலவும் இடநெருக்கடியைப் போக்கும் பொருட்டு புதிய மாடிக்கட்டிடமொன்று அமைக்கப்படுகிறது.

இம் மாடிக்கட்டிடத்தின் முதற்கட்ட வேலைகளுக்காக 1லட்சத்து 75 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# கூட்டுத் தளபதி ...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வேறு வழியில்லை.

தரை மார்க்கமான தேடுதல் நடவடிக்கைகள் ஆகாயப் பாதுகாப்புடன் மேற்கொள்ளப் படும்.

உத்தரவை எதிர்பார்த்து வட பகுதியில் ஆயுதப்படையினர் தயார் நிலையில் உள்ளனர். யாழ் மக்களின் நலன்களுக்காக எமது படையினரை இது வரை காலமும் கட்டுப்படுத்தி வைத்தோம்.

தீவிரத் தாக்குதல் நடத்தப்படும் போது குடிமக்கள் பெரிய அளவில் பாதிப்புக்கு ஆளாக நேரிடும்.

அதனால் தான் பலாலி, தொண்டமனாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறைப் பகுதிகளில் இருந்து மக்களை வெளியேறும்படி கேட்டுள்ளோம்.

இப்படி கூட்டுத்தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்க சொன்னார்.

# இலங்கை ....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றத்தின் சட்டவாக்க அதிகாரத்துக்கோ பாதிப்பு ஏற்படாமல் அவை இருக்குமென்றும் தெரிகிறது

**அந்தியேட்டி அழைப்பு**
15 - 04 - 1986



**செல்வி புஷ்பலதா தியாகராஜா**
மலர்வு: 13—09—1967
உதிர்வு: 16—03—1986

கல்வியிலும் கலைகளிலும் விளையாட்டினிலும் புகழ் பெற்றாய், உன் புகழால் நாமெல்லாம் பெருமை கொண்டோம் இன்று உன் புகழை நாம் சொல்ல நீ எங்கு சென்றனையோ, எம் மடியில் நீயிருந்தால் ஓங்கும் புகழ் எத்தனையோ மீளாத் துயிலுக்கு நீ சென்றுவிட்டதனால் நாமோ துயிலின்றி நாளும் வாடுகின்றோம், உன் ஆத்மசாந்திக்கு ஆண்டவனை வேண்டுகின்றோம்.

இறுதிக் கிரியைகளில் நேரில் வந்தும், தந்திகள் மூலமும் அனுதாபம் தெரிவித்த யாவருக்கும் நன்றி கூறுகின்றோம். 15-4-86ல் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளுக்கும் வருகை தருமாறு யாவரையும் வேண்டுகிறோம்.

அன்புத் தந்தை, தாய், தங்கை,
வி. எஸ். தியாகராஜா குடும்பத்தினர்
மருதங்கேணி, (அஞ்சல் அதிபர். கன்னாகம்)
தாளையடி.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷ்ரூ உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15. ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியீட்ட திகதி 14 - 04 - 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org